**PRIMARY SCHOOL**


**PRELIMINARY EXAMINATION - 2015**

**TAMIL LANGUAGE - COMPOSITION**

**PRIMARY 6**

<u>வினா 2</u>

கீழ்க்காணும் படத்தொடரை அடிப்படையாகக் கொண்டு, **<u>100 சொற்களுக்குக் குறையாமல்</u>** ஒரு கட்டுரை / கதை எழுது. படத்தொடரின் அடியில் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களையும் சொற்றொடர்களையும் கட்டுரை / கதை எழுதுவதற்கு உதவியாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.




| | |
|---|---|
| கடற்கரையில் | மிதிவண்டி |
| எதிர்பாராமல் | பறித்துக் கொண்டு |
| பின்தொடர்ந்து | மறுபுறமாக |

22

# PRIMARY SCHOOL

# PRELIMINARY EXAMINATION - 2015

# TAMIL LANGUAGE - COMPOSITION

# PRIMARY 6

**Time:** 50 mins **Marks:** 40

இவ்வினாத்தாளில் இரண்டு வினாக்கள் உள்ளன. அவற்றுள் ஒன்றுக்கு மட்டும் விடையளிக்கவும். இவ்வினாத்தாளைப் படிப்பதற்கும், வினாவைத் தேர்ந்தெடுப்பதற்கும், கட்டுரை எழுதுவதற்கும் மொத்தம் 50 நிமிடங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. வினாவைத் தேர்ந்தெடுப்பதற்கு 10 நிமிடங்களுக்கு மேல் செலவிட வேண்டாம்.

## வினா 1

### கைத்தவறி விழுந்த பூஜாடி

ஒரு நாள் நீ ஒரு பரிசுப் பொருள் வாங்க கடைக்குச் செல்கிறாய். அங்கு இருந்த ஒரு பூஜாடியை (flower vase) எடுத்துப் பார்த்துக்கொண்டிருக்கிறாய். அப்போது பூஜாடி கைத்தவறி கீழே விழுந்து உடைந்துவிட்டது.

அந்தச் சம்பவத்தை விவரித்து 80 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை எழுது.

கீழே கொடுக்கப்பட்டிருக்கும் குறிப்புகளை இந்தக் கட்டுரை எழுதுவதற்கு உதவியாக நீ பயன்படுத்திக் கொள்ளலாம்.

- நீ யாருக்காக / எதற்காகப் பரிசு வாங்கச் சென்றாய்?
- பூஜாடி எவ்வாறு இருந்தது?
- பூஜாடி கீழே விழுந்தபோது உன் மனநிலை எப்படி இருந்தது?
- அப்போது கடையில் இருந்த வாடிக்கையாளர்கள் என்ன செய்தார்கள்?
- கடைக்காரர் எவ்வாறு நடந்துகொண்டார்?
- இந்த அனுபவத்தின் மூலம் நீ கற்றுக்கொண்ட பாடம் என்ன?

# P6 PRELIMINARY
# TESTPAPER 2

*Q1 முதல் Q23 வரையுள்ள வினாக்களுக்கு OAS விடைத்தாளில் சரியான விடையின் எண்ணுள்ள (1, 2, 3 அல்லது 4) நீள்வட்டத்தை நிழலிடு.*

'அ' பிரிவு

## *A1 வேற்றுமை*

*Q1 முதல் Q6 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான வேற்றுமை உருபு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (12 மதிப்பெண்கள்)*

ஒருநாள் எலி ஒன்று குளத்தில் விழுந்துவிட்டது. ______(Q1)______ நீர் வற்றிவிட்டதால் அதில் சேறு நிறைந்திருந்தது. சேற்றுக்குள் கழுத்தளவு அமிழ்ந்துவிட்ட ______(Q2)______ அங்கிருந்து வெளியேற முடியவில்லை. அது உதவிக் கோரிச் சத்தமிட்டது. அவ்வழியாக வந்த ஒரு ______(Q3)______ எலி, தன்னைக் காப்பாற்றும்படி வேண்டிக்கொண்டது. அதற்குச் சிங்கம், "நான் உன்னைச் ______(Q4)______ வெளியேற்றுகிறேன். ஆனால், நீ எனக்கு இரையாக வேண்டும்," என்று நிபந்தனை விதித்தது. சிங்கத்தைத் தனது தந்திரத்தால் ஏமாற்றி, தப்பித்துவிடலாம் என்ற ______(Q5)______ எலியும் அதற்குச் சம்மதித்தது. சிங்கம் அதன் நீண்ட ______(Q6)______ குளத்திற்குள் நீட்டியது. தனது தந்திரத்தால் எலி சிங்கத்திடமிருந்து தப்பியது.

Q1. (1) அக்குளத்தை
(2) அக்குளத்தில்
(3) அக்குளத்திற்கு
(4) அக்குளத்தால்

Q2. (1) எலியுடன்
(2) எலியின்
(3) எலியை
(4) எலியால்

Q3. (1) சிங்கத்திடம்
(2) சிங்கத்துக்கு
(3) சிங்கத்தோடு
(4) சிங்கம்

Q4. (1) சேற்றின்
(2) சேற்றில்
(3) சேற்றிலிருந்து
(4) சேற்றால்

Q5. (1) எண்ணத்துக்கு
(2) எண்ணத்தை
(3) எண்ணத்துடன்
(4) எண்ணத்திலிருந்து

Q6. (1) வாலுடன்
(2) வாலை
(3) வாலுக்கு
(4) வாலில்

*A2 செய்யுள் / பழமொழி*

*Q7 முதல் Q12 வரையுள்ள செய்யுள்/பழமொழியை நிறைவு செய்வதற்கு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (12 மதிப்பெண்கள்)*

Q7 மோப்பக் குழையும் __________ முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.

(1) வெளிச்சம்
(2) அனிச்சம்
(3) அச்சம்
(4) மச்சம்

Q8 __________ அழகு வரும்பொருள் உரைத்தல்

(1) வல்லவனுக்கு
(2) அறிஞர்க்கு
(3) அதிபருக்கு
(4) மந்திரிக்கு

Q9 இன்னாசெய் தாரை __________ அவர்நாண
நன்னயம் செய்து விடல்

(1) ஒறுத்தல்
(2) மறுத்தல்
(3) வெறுத்தல்
(4) பொறுத்தல்

Q10 __________ கோணல் முற்றும் கோணல்

(1) அசல்
(2) நகல்
(3) முதல்
(4) பகல்

Q11 விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே
____________ தலைகாண்பு அரிது.

(1) பசும்பயிர்
(2) பசும்பால்
(3) பசும்புல்
(4) பசும்பொன்

Q12 முயற்சி உடையார் ____________ அடையார்

(1) புகழ்ச்சி
(2) இகழ்ச்சி
(3) மகிழ்ச்சி
(4) நிகழ்ச்சி

## B3 தெரிவுவிடைக் கருத்தறிதல்

*பின்வரும் கதையைக் கருத்தூன்றிப் படி.*

ஓர் ஊரில் வித்தைக்காரன் ஒருவன் இருந்தான். அவன் ஊர் ஊராகச் சுற்றி வேடிக்கைக் காட்டித் தன்னுடைய வாழ்க்கையை நடத்தி வந்தான். அவனிடமிருந்த மூட்டைகளைச் சுமப்பதற்குக் கழுதையொன்று உடனிருந்தது.

அவன் ஓர் ஊருக்குச் சென்றால், ஒதுக்குப்புறமான ஓர் இடத்தில் தன் கூடாரத்தை அமைப்பான். தான் மறைமுகமாக வைத்திருக்கும் புலித்தோல் ஒன்றையெடுத்து அக்கழுதையின் மேல் போர்த்தி ஊராரின் பயிர்களில் மேய விட்டுவிடுவான். புலித்தோல் போர்த்திய கழுதையைப் பார்ப்பவர்கள், "புலி வந்து மேய்கிறது. நாம் போய் விரட்டினால் நம்மை அடித்துக் கொன்றுவிடும்," என்று கத்தியபடியே அஞ்சியோடுவது வழக்கம். கழுதை பயிர்களை <u>வயிறுமுட்ட</u> மேயும். இதனால், தான் செல்லும் ஒவ்வோர் ஊரிலும் பயிர்கள் எல்லாம் நாசமாகுவதை வித்தைக்காரன் உணரவேயில்லை. ஒவ்வோர் ஊரிலும் அவனுடைய வேலை முடிந்தவுடன் தான் சம்பாதித்த பணத்தை எடுத்துக்கொண்டு மறுநாள் வேறொரு ஊருக்குச் சென்றுவிடுவான்.

இவ்வாறு நடந்துக்கொண்டிருக்கையில் ஒருநாள் வித்தைக்காரன் சிற்றூர் என்ற ஊருக்குச் சென்றான். வழக்கம் போல் அவ்வூரில் கழுதை புலித்தோலைப் போர்த்திக்கொண்டு, ஒருவருடைய தோட்டத்தில் மேய்ந்து கொண்டிருந்தது. அதைப் பார்த்த தோட்டக்காரன் ஒருவன் மிகுந்த வியப்பால் வாயடைத்து நின்றான். புலித்தோலைப் பார்த்து அவன் கிலி கொள்ளவில்லை. அவன், "புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது என்பார்களே, அவ்வாறிருக்க புலி பயிரை மேய்கிறதே!" என்று ஐயத்துடன் தனக்குள் முனுமுனுத்துக்கொண்டான். இதில் ஏதோ <u>சூழ்ச்சி</u> இருக்கிறது என்பதை உணர்ந்தான்.

மறுநாள், தோட்டக்காரன் ஒரு திட்டத்தோடு ஊர்மக்கள் நால்வரை அழைத்துக் கொண்டு வந்து தோட்டத்தின் நாற்புறங்களிலும் நிற்கச் செய்தான். பின்பு, அவர்களைச் சிங்கம் போல் கர்ஜிக்கச் சொன்னான். சிங்கம் கர்ஜிக்கும் ஒலியைச் செவியுற்ற கழுதை, சிங்கம் ஒன்று தன்னைக் கொன்று தின்ன வருவதாக எண்ணி பயந்தது. அதற்குப் பயத்தால் பதற்றம் உண்டாக, கழுதை பேரொலியை எழுப்பியது. கழுதையின் பேரொலியைக் கேட்டதும் அங்கிருந்தோர் தங்கள் கைகளிலிருந்த நீண்ட தடிகளால் அதை அடித்தனர். வலி தாங்காமல் அது அந்த இடத்தைவிட்டே ஓடியது. ஊர்மக்கள்

அந்த வித்தைக்காரனைத் தேடிப்பிடித்து அவனுடைய கழுதை ஏற்படுத்திய சேதத்திற்கு பணம் செலுத்த வைத்தனர். வித்தைக்காரன் தான் இதுவரை ஈட்டிய பணத்தை எல்லாம் கொடுக்க நேர்ந்தது. வித்தைக்காரனும் தான் ஏமாற்றிப் பிழைத்ததை எண்ணி வருந்தினான்.

*Q13 முதல் Q17 வரையுள்ள வினாக்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியையொட்டி அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)*

Q13. வித்தைக்காரன் ஏன் கழுதையை வைத்திருந்தான்?

(1) அதைக்கொண்டு வேடிக்கைகள் காட்டுவதற்காக
(2) தன்னிடமிருந்த மூட்டைகளைச் சுமப்பதற்காக
(3) அதில் ஏறி ஊர் ஊராகச் சுற்றி வருவதற்காக
(4) ஊராரின் பயிர்களில் மேய விடுவதற்காக

Q14. கழுதைக்கு ஏன் புலித்தோல் போர்த்தப்பட்டது?

(1) புலித்தோலை மறைமுகமாக வைக்க
(2) கழுதைக்கு இலவசமாக உணவை அளிக்க
(3) வித்தைக்காரனின் கழுதையைப் புலியாக மாற்ற
(4) ஓர் ஊர் விட்டு வேறு ஊருக்குச் செல்ல

Q15. ஊர்மக்கள் கழுதையை விரட்டாததால் என்ன நடந்தது?

(1) கழுதை தைரியமின்றி பயிர்களை மேய்ந்தது
(2) கழுதை தோட்டத்திலேயே தங்கியது
(3) ஊராரின் பயிர்கள் எல்லாம் அழிந்தன
(4) மக்கள் அதைக் கண்டு அஞ்சியோடினர்

Q16. தோட்டக்காரன் எதற்காக ஊர்மக்களை நால்வரை அழைத்து வந்தான்?

(1) புலியின்மேல் சந்தேகம் எழுந்ததால்
(2) புலியை உயிரோடு பிடிக்க எண்ணியதால்
(3) கழுதையை அவ்விடத்திலிருந்தே விரட்ட நினைத்ததால்
(4) புலியின் வேடத்தில் வேறு மிருகம் இருந்ததை உணர்ந்ததால்

(அடுத்த பக்கம் பார்க்க)

Q17. கழுதை ஏன் பேரொலி எழுப்பியது?

(1) சிங்கத்தின் கர்ஜினையைக் கேட்டதால்
(2) சிங்கம் தன்னை நோக்கி ஓடி வந்ததால்
(3) ஊர்மக்கள் நால்வர் நாற்புறமும் சூழ்ந்ததால்
(4) ஊர்மக்களைப் பார்த்ததால்

## B4 சொற்பொருள்

*Q18 முதல் Q20 வரையுள்ள சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம்பெற்றவை. அவற்றின் பொருளை உணர்த்தும் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு.அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (6 மதிப்பெண்கள்)*

Q18. வயிறுமுட்ட

(1) வயிறுவலிக்க
(2) வயிறுநிரம்ப
(3) வயிறுவளர்க்க
(4) வயிறெரிய

Q19. சூழ்ச்சி

(1) தந்திரம்
(2) நன்மை
(3) பஞ்சம்
(4) எளிமை


Q20. சேதத்திற்கு

(1) லாபத்திற்கு
(2) மோசத்திற்கு
(3) நட்டத்திற்கு
(4) நாசத்திற்கு


(அடுத்த பக்கம் பார்க்க)

*B5 கருத்து விளக்கப்பட கருத்தறிதல்*

*பின்வரும் விளம்பரத்தைக் கருத்தூன்றிப் படி.*



## அதிசயம்! ஆனால் உண்மை!!




### செங்காங்கில் தேக்கா!!

## பொன்னி அரிசி வேண்டுமா? மல்கோவா மாம்பழம் வேண்டுமா?

*இறைச்சி வகைகளைத் தவிர, உங்கள் இல்லத்திற்குத் தேவையான மற்ற மளிகைச் சாமான்கள், காய்கறிகள், பழங்கள், பூக்கள், பூஜைக்குத் தேவையான ஊதுவத்தி மற்றும் மெழுகுவத்தி போன்ற பொருள்கள் ஆகிய அனைத்தும் எங்களிடம் கிடைக்கும். இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட சில காய்கறி வகைகளும் இங்கே கிடைக்கும்.*


*'தாமரை' சின்னம் கொண்ட எல்லாவிதமான கறி மசாலாத் தூள் வகைகளும் கிடைக்கும்.*
*சமைத்தால் சுவைக்கும்!*
*சுவைத்தால் ருசிக்கும்!!*





## ஆதவன் மளிகைக் கடை

*எண் 95, செங்காங் அவென்யூ 9,*
*சிங்கப்பூர் 720095*
*தொலைபேசி : 66257576*
*தொலைபிரதி : 66257777*



*கடை திறந்திருக்கும் நேரம்:*

- *வார நாள்களில் காலை 8 முதல் இரவு 10 மணி வரை*
- *வார இறுதி நாள்களில் காலை 8 முதல் நள்ளிரவு 12 மணி வரை (பொது விடுமுறை நாள்களில் கடை திறந்திருக்காது)*

**சிறப்புச் சேவை**

*தேவைப்பட்டால் சாமான்கள் வீட்டிற்கு நேரடியாக அனுப்பி வைக்கப்படும்*

*இணையம்வழி பொருள்களைத் தெரிவு செய்வோருக்கு 5% தள்ளுபடி!!*



*Q21 முதல் Q23 வரை இடம்பெற்றுள்ள வினாக்கள் முன்பக்கத்தில் தரப்பட்டுள்ள விளம்பரத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன.ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (6 மதிப்பெண்கள்)*

Q21. இந்த விளம்பரம் எதை அதிசயம் என்கிறது?

(1) இக்கடையில் பொன்னி அரிசி கிடைப்பதை
(2) இக்கடையில் எல்லா விதமான கறி மசாலாத் தூள் வகைகள் விற்கப்படுவதை
(3) இக்கடை செங்காங்கில் ஒரு குட்டித் 'தேக்கா' போன்று இயங்குவதை
(4) இக்கடை தினந்தோறும் நீண்ட நேரம் இயங்குவதை

Q22. இக்கடையில் என்ன வாங்க இயலாது?

(1) ஊதுவத்தியும் மலர்களும்
(2) தக்காளியும் கீரையும்
(3) சீனியும் உப்பும்
(4) கோழியும் மீனும்

Q23. இந்தக் கடையின் சிறப்புச் சலுகை என்ன?

(1) இணையத்தின்மூலம் பொருள்களைத் தேர்தெடுத்து வாங்குவோருக்கு 5% தள்ளுபடி வழங்கப்படும்
(2) எல்லோருக்கும் பொருள்கள் வீட்டிற்கு அனுப்பி வைக்கப்படும்
(3) பொருள்களை வீட்டிற்கு அனுப்பி வைக்கக் கூறுவோருக்குச் சிறப்புச் சலுகை உண்டு
(4) வார இறுதி, பொது விடுமுறை நாள்களிலும் கடை நள்ளிரவு வரை திறந்திருக்கும்

(அடுத்த புத்தகத்தைப் பார்க்க)

**Q24 முதல் Q41 வரையுள்ள வினாக்களுக்கான விடைகளை இந்தப் புத்தகத்தில் எழுது.**

'ஆ' பிரிவு

## C6 ஒலி வேறுபாட்டுச் சொற்கள்

*பின்வரும் பகுதியில் Q24 முதல் Q28 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்குப் பொருத்தமான ஒலி வேறுபாட்டுச் சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (10 மதிப்பெண்கள்)*

Q24 சென்ற விடுமுறையில் நான் இந்தியா சென்றிருந்தேன். அங்கு என் பாட்டியின் கிராமத்தில் நான் பல ____________ மாடுகளைப் பார்த்தேன். Q24 (   )

Q25 வேடன் ஒருவன் ____________ எய்து வெண்புறா ஒன்றைக் கொன்றான். அப்புறா தரையில் விழுந்து துடிதுடித்து இறந்தது. Q25 (   )

Q26 நான் சில கணினி வட்டுகள் வாங்க எண்ணினேன். ஆனால், அவற்றின் ____________ அதிகமாக இருந்ததால் நான் என் முடிவை மாற்றிக்கொண்டேன். Q26 (   )

Q27 சீனப்புத்தாண்டு நெருங்கிக்கொண்டு இருந்தது. சீனர்கள் அன்று சிவப்பு ____________ பணம் வைத்து வழங்குவது வழக்கம். Q27 (   )

Q28 இந்துக்கள் கொண்டாடும் பண்டிகைகளில் தீபாவளியும் ஒன்று. அன்று அவர்கள் வீட்டில் ____________ ஏற்றி வைக்க தவறமாட்டார்கள். Q28 (   )

| | | | |
|---|---|---|---|
| 1. உறைகளில் | 2. விலக்கு | 3. பானம் | 4. காளை |
| 5. விலை | 6. உரைகளில் | 7. காலை | 8. விளக்கு |
| | 9. விழை | 10. பாணம் | |

/10

## D7 முன்னுணர்வுக் கருத்தறிதல்

*பின்வரும் பகுதியில் Q29 முதல் Q35 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்குப் ஏற்றச் சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது.*
*(14 மதிப்பெண்கள்)*

| | |
|---|---|
| அன்றொரு நாள் வெயில் கடுமையாக இருந்தது. அந்தகன் ஒருவன் தட்டித் தடவிக் கொண்டு __(Q29)__ இருக்கும் இடத்தைத் தேடிச் சென்று கொண்டிருந்தான். ஓரிடத்தில் குளிர்ந்த நிழல் தன் மீது __(Q30)__ உணர்ந்த அவன், கைக்கோலினால் தடவிப் பார்த்து, அங்கிருந்த ஒரு மரத்தின் அடியிலே போய் உட்கார்ந்தான். | Q29 ( )<br>Q30 ( ) |
| சிறிது நேரம் சென்றபின் 'தொப்' பென்று ஏதோ விழுந்த ஓசை கேட்கவே, அவன் ஒலி வந்த இடத்தை நோக்கி நகர்ந்தான். அந்தகன் தன் கையால் தரையைத் தடவினான். அவன் தன் __(Q31)__ தட்டுப்பட்ட மாங்காயை உண்டான். அந்த மாங்காய் சிறிதும் புளிப்பில்லாமல் இனிப்பாக இருந்ததால் இன்னொரு மாங்காய் தின்னவேண்டும் என்ற __(Q32)__ அவனுக்கு உண்டாயிற்று. தலைக்கு மேலே மாங்காய்கள் __(Q33)__ தொங்குகின்றன் என்பதை அந்தகன் உணர்ந்தான். | Q31 ( )<br>Q32 ( )<br>Q33 ( ) |
| பின்பு, கைக்கோலை மேலே வீசி எறிந்தால் தலைக்கு மேலே காய்த்துத் தொங்கும் மாங்காய்கள் ஏதாவது விழும் என்ற எண்ணத்தில் அவன் தன்னுடைய கைக்கோலை வீசினான். கைக்கோல் 'சிவ்' வென்ற ஓசையுடன் மேல் நோக்கிச் சென்றது. அது மரக்கிளைகளின் __(Q34)__ சிக்கிக் கொண்டது. மாங்காயும் விழவில்லை, கைத்தடியும் பறிபோயிற்று. அந்தகன் என்ன செய்வதென்று தெரியாமல் சிறிது நேரம் தயங்கியபடியே இருந்தான். பிறகு தான் செய்த __(Q35)__ செயலை எண்ணி நொந்து கொண்டே, கைக்கோல் இல்லாமலேயே அவன் அந்த இடத்தைவிட்டு கிளம்பினான். வழியில் அவன் பல தொல்லைகளை அனுபவித்துக் கொண்டு தன் இல்லத்தை அடைந்தான். | Q34 ( )<br>Q35 ( ) |

| | | | |
|---|---|---|---|
| 1. | எதிரே | 2. | ஆவல் |
| 3. | மலர்ந்து | 4. | சுடுவதை |
| 5. | கண்மூடித்தனமான | 6. | நிழல் |
| 7. | கையில் | 8. | தண்ணீர் |
| 9. | படுவதை | 10. | இடையே |
| 11. | பெருமையான | 12. | காய்த்து |

14

*D8 சுயவிடைக் கருத்தறிதல்*

*பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படி.*

அரசன் ஒருவனிடம் சிறந்த அறிவுடைய மாவீரன் ஒருவன் தளபதியாகப் பணியாற்றினான். தளபதியின் புகழ் நாடெங்கும் பரவியது. அதைக் கண்ட அந்நாட்டு அமைச்சன், தளபதிமீது பொறாமை கொண்டான். அதனால், தளபதியை ஒழிக்க அவன் தக்க தருணம் பார்த்துக் காத்திருந்தான். ஒருநாள் அரசன் தனித்திருந்த வேளையில் அமைச்சன் அரசனிடம் தளபதியைப் பற்றி இல்லாததும் பொல்லாததும் கூறினான். அதைக் கேட்டு ஆத்திரமடைந்த அரசன் ஆராயாமல் தளபதிக்கு மரண தண்டனை விதித்தான்.

தளபதியின் மனைவி அதைக் கேள்விப்பட்டவுடனே தன் கணவனைக் காப்பாற்றும்படி மன்னனிடம் மன்றாடினாள். மனமிரங்கிய மன்னன் அவளிடம், "அம்மா! உன் கணவனுக்கு நான் விதித்த தண்டனையை மாற்றமுடியாது. வேண்டுமானால் நாளை அரசவையில் 'குற்றவாளி' என்று ஓர் ஓலையிலும் 'நிரபராதி' என்று மற்றோர் ஓலையிலும் எழுதி வைத்திருக்கச் சொல்கிறேன். நீ எடுக்கும் ஓலையில் என்ன எழுதியிருக்கிறதோ அதன்படி முடிவு செய்கிறேன்," என்று கூறினான்.

அரசன் அமைச்சனிடம் அந்த இரண்டு ஓலைகளையும் தயார்படுத்தச் சொன்னான். ஆனால், அமைச்சன் ஓலைகள் இரண்டிலும் 'குற்றவாளி' என்றே எழுதி அவற்றை ஓர் குடத்தினுள் வைத்து அரசவைக்குக் கொண்டு வந்தான். அமைச்சன் செய்த சூழ்ச்சியைத் தளபதியின் மனைவி தெரிந்துகொண்டாள். அவள் குடத்தினுள் வைக்கப்பட்ட ஓலைகளில் ஒன்றை எடுத்தாள். அதைத் திறந்துப் பார்க்காமல் கையில் இறுக்கிப் பிடித்துக்கொண்டாள். பின் அவள், "மன்னவா! இதோ, நான் எடுத்த ஓலையில் 'குற்றவாளி' என்று எழுதப்பட்டிருந்தால் என் இதயம் சுக்கு நூறாக வெடித்துவிடும். நீங்களே குடத்திலுள்ள மற்றொரு ஓலையை எடுத்துப் பார்த்து முடிவைக் கூறுங்கள்," என்றாள்.

அரசன் எடுத்த ஓலையில் 'குற்றவாளி' என்று எழுதப்பட்டிருந்தது. அதனால், தளபதியின் மனைவி எடுத்த ஓலையில் 'நிரபராதி' என்றுதான் எழுதப்பட்டிருக்க வேண்டுமென அரசன் முடிவு செய்தான். எனவே, தளபதியை விடுதலை செய்தான். பின்பு, தளபதியின் மனைவி தன் கையில் இருந்த ஓலையை அரசனிடம் காட்டி அமைச்சனின் சூழ்ச்சியை அரசனிடம் கூறினாள். அரசன் உண்மையை அறிந்து அமைச்சனை நாடு கடத்தினான்.

*Q39. தளபதியின் மனைவி ஏன் தான் எடுத்த ஓலையைப் படிக்கவில்லை? (2)*

*Q40. அரசன் ஏன் த்ளபதியை விடுதலை செய்தான்? (3)*

*Q41. அரசன் அமைச்சனை நாடு கடத்தக் காரணம் என்ன? (3)*

20

*(முற்றும்)*

**P6 PRELIMINARY**
**TESTPAPER 2**

ஒரு நாள் எலி ஒன்று குளத்தில்...

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1) 2 | 2) 4 | 3) 1 | 4) 3 | 5) 3 | 6) 2 |
| 7) 2 | 8) 4 | 9) 1 | 10) 3 | 11) 3 | 12) 2 |
| 13) 3 | 14) 2 | 15) 3 | 16) 4 | 17) 1 | 18) 2 |
| 19) 1 | 20) 4 | 21) 3 | 22) 4 | 23) 1 | 24) 4 |
| 25) 10 | 26) 5 | 27) 1 | 28) 8 | 29) 6 | 30) 9 |
| 31) 7 | 32) 2 | 33) 12 | 34) 10 | 35) 5 | |

36) தளபதியின் புகழ் நாடெங்கும் பரவியது.இதுவே அமைச்சன் தளபதியின் மீது பொறாமை கொள்ளக் காரணம் ஆகும்.

36) ஆ) அரசன் தனித்திருந்த வேளையில் அமைச்சன் அரசனிடம் தளபதியைப் பற்றி இல்லாததும் பொல்லாததும் கூறினான்.இவ்வாறே அவன் தளபதியை ஒழிக்கத் திட்டம் தீட்டினான்.

37) தன் கணவனின் தண்டனையைப் பற்றி அறிந்த தளபதியின் மனைவி மன்னனிடம் சென்று தன் கணவனைக் காப்பாற்றுபடி மன்றாடினாள்.

38) மனமிரங்கிய மன்னன் தளபதியின் மனைவியிடம் மறுநாள் அரசவையில் 'குற்றவாளி' என்று ஓர் ஓலையிலும் 'நிரபராதி' என்று ஓர் ஓலையிலும் எழுதி வைக்கச் சொல்வதாகவும் , அதிலிருந்து அவள் எடுக்கும் ஓலையில் என்ன எழுதியிருக்கிறதோ அதன் படி முடிவு செய்வதாகவும் கூறினான்.

39) அமைச்சன் செய்த சூழ்ச்சியை தளபதியின் மனைவி அறிந்து கொண்டாள். அதனால் தான் எடுத்த ஓலையில் 'குற்றவாளி' என்று தான் எழுதப்பட்டிருக்கும் என்று முன்கூட்டியே தெரிந்து கொண்டதால் அவள் தான் எடுத்த ஓலையைப் படிக்கவில்லை.

40) அரசன் தான் எடுத்த ஓலையில் 'குற்றவாளி' என்று எழுதியிருந்ததால், தளபதியின் மனைவி எடுத்த ஓலையில் 'நிரபராதி' என்றுதான் எழுதப்பட்டிருக்கும் என்று முடிவு செய்தான். அதனால் அவன் தளபதியை விடுதலை செய்தான்.

41) தளபதியின் மனைவி தன் கையிலிருந்த ஓலையில் 'குற்றவாளி' என்று எழுதப்பட்டிருந்ததை அரசனிடம் காட்டினாள். அரசனின் எடுத்த ஓலையிலும் 'குற்றவாளி' என்றே எழுதப்பட்டிருந்தது. இதன் மூலம் அமைச்சன் செய்த சூழ்ச்சியை அரசனிடம் கூறினாள்.இந்த உண்மையை அறிந்ததே அரசன், அமைச்சனை நாடு கடத்தக் காரணம் ஆகும்.